**இலங்கை பொலிஸ்**

**பயிலுநர் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள்**

**அடிப்படைத் தகைமைகள்**

- ❖ **வயதெல்லை**

*வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணபப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18-25 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.*

- ❖ **கல்வித் தகைமைகள்**

*க.பொ.த (சா/த) பரீட்சையில் தாய் மொழிக்கு திறமைச் சித்தியுடன் விண்ணப்பதாரி ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும் என்பதுடன் 04 பாடங்களில் திறமைச் சித்தியெய்திருத்தல் வேண்டும். அத்துடன், கணிதப் பாடத்தில் இரு தடவைகளுக்கு மேற்படாது சித்தியெய்திருத்தல் வேண்டும்.*

*குறிப்பு 01* **இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் படி பாட எண் 41,44 விஞ்ஞானப் பாடங்கள் ஒரு பாடமாகவும் , பாட எண் 42 மற்றும் 45 கணிதப் பாடங்கள் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மாணிக்கப்படும்.**

*குறிப்பு 02* **க.பொ.த (சா/த) பரீட்சையில் தொழிநுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப் பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்திருப்பின், அப் பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.**

*குறிப்பு 03* **விருப்பத்துக்குறிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க.பொ.த (சா/த) பரீட்சைப் பாடத்திட்டத்தில் அடங்குவதில்லை என்பதால், அப் பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்ததாக கருதப்படமாட்டாது.**

- ❖ **உடற்த் தகைமைகள்**

- *உயரம் 05 அடி 01 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (செ.மீ 154.94) (குறைந்தது)*